بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *06/02/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவணக்கம் தொடர்பாக ஈமானுக்கு ஒளியூட்டும், மனம் கவரும் குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்லாஹ் தஆலா நமக்குக் கூறியுள்ளபடி, நிச்சயமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகவும், அனைத்து விஷயங்களிலும் அழகிய முன்மாதிரியாகவும் இருக்கிறார்கள். கடந்த குத்பாக்களில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இறைநேசம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இறைவணக்கம் என்பது இறைநேசமின்றி சாத்தியமில்லை; அதேபோல் இறைநேசம் இறைவணக்கமின்றி சாத்தியமில்லை. அல்லாஹுத்த ஆலா மீது நேசம் இல்லையென்றால் உண்மையான முறையில் இறைவணக்கம் செய்யவே முடியாது. இன்று நான் இது குறித்து மேலும் சிலவற்றை விவரிப்பேன்.

அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அன்பின் தரத்தை இவ்வாறு விவரித்துள்ளான்:

قُلۡ اِنَّ صَلَاتِیۡ وَ نُسُکِیۡ وَ مَحۡیَایَ وَ مَمَاتِیۡ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ

"நிச்சயமாக எனது தொழுகையும், எனது தியாகமும், எனது வாழ்வும், எனது மரணமும் அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியது என்று (நபியே!) நீர் கூறுவீராக."

அல்லாஹுத்தஆலா அன்னார் மூலமாக இவ்வாறு அறிவிக்க செய்து இந்த உயரிய தரத்தை அடைவதற்கு நமக்கும் கவனமூட்டுகிறான்.

இறைவணக்கம் குறித்து அல்லாஹ் தஆலா திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வாயிலாக எண்ணற்ற கட்டளைகளை கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்:

وَ مَا خَلَقۡتُ الۡجِنَّ وَ الۡاِنۡسَ اِلَّا لِیَعۡبُدُوۡنِ

"மேலும் ஜின்களையும் மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை."

பிரிதோரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்:

یٰۤاَیُّہَا النَّاسُ اعۡبُدُوۡا رَبَّکُمُ الَّذِیۡ خَلَقَکُمۡ وَ الَّذِیۡنَ مِنۡ قَبۡلِکُمۡ لَعَلَّکُمۡ تَتَّقُوۡنَ

“மக்களே! உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தவர்களையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள்; (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுடையவர்களாகலாம்.

அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கும், தக்வாவைக் கடைப்பிடிப்பதற்கும் இறைவணக்கம் செய்ய வேண்டியதும் இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்திக் கொண்டே செல்ல வேண்டியதும் அவசியமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த கட்டளைகளை வழங்கியபோது, அதைத் தனது செயல்கள் மூலம் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்று காட்டினார்கள். பிறகு அந்தத் தரத்தை அடைய முயற்சிக்கும்போதுதான் உண்மையான கீழ்ப்படிதலும் பின்பற்றுதலும் முழுமையடையும் என்று நமக்கு கவனமூட்டினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையையும் கட்டளைகளையும் எப்போதும் கண்முன் வைத்துச் செயல்படும்போதுதான் அன்னார் தமது உம்மத்திற்காகச் செய்த துஆக்கள் நம்மைச் சூழ்ந்து நமக்குப் பயனுள்ளதாக அமையும்.

சில உதாரணங்களை நான் முன்வைக்கிறேன். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அறிவிக்கிறார்கள்: "ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சித்திர வேலைப்பாடுகள் கொண்ட ஒரு போர்வையில் தொழுதார்கள். தொழுகையின் போது அதன் சித்திரங்கள் மீது ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பார்வை விழுந்தது. தொழுது முடித்ததும் அன்னார் கூறினார்கள்: இந்தப் போர்வையை அபூ ஜஹ்மிடம் கொண்டு செல்லுங்கள். அவரது (சித்திரங்கள் இல்லாத) சாதாரண போர்வையைக் கொண்டு வாருங்கள். ஏனெனில், (சித்திரங்கள் உள்ள) இந்தப் போர்வை இப்போது எனது தொழுகையில் கவனத்தைத் திசைதிருப்பியது."

ஹஸ்ரத் ஜாஃபர் பின் முஹம்மது (ரலி) தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: "நாங்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம், தங்களது வீட்டில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் படுக்கை எவ்வாறு இருந்தது? என்று கேட்டோம். அதற்கு அவர்கள், தோலினால் ஆனதாக இருந்தது. அது, பேரீச்ச மர நாரினால் நிரப்பப்பட்டதாக இருந்தது என்று கூறினார்கள்."

ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம், உங்கள் வீட்டில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் படுக்கை எவ்வாறு இருந்தது என்று கேட்டபோது, அவர்கள் கூறினார்கள்: "அது கம்பளியால் ஆனதாகும். அதை நான் இரண்டு மடிப்புகளாக மடித்துப் போடுவேன். அதன் மேல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உறங்குவார்கள். ஓரிரவு நான், அதை ஏன் நான்கு மடிப்புகளாக மடிக்கக் கூடாது? இன்னும் மென்மையாக இருக்குமே என்று நினைத்து நான்கு மடிப்புகளாக மடித்தேன். காலை விடிந்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், நேற்றிரவு எனக்கு என்ன விரித்திருந்தீர்கள்? என்று கேட்டார்கள். நான் கூறினேன்: அது உங்கள் பழைய படுக்கைதான்; ஆனால் நீங்கள் இன்னும் நிம்மதியாக உறங்க வேண்டும் என்பதற்காக அதை நான்கு மடிப்புகளாக மடித்தேன். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அதை மீண்டும் பழைய நிலைக்கு மாற்றிவிடுங்கள். ஏனெனில், அதன் மென்மை எனது இரவு நேர தொழுகையில் தடையாக இருந்தது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நான் வாகனத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்திருந்தேன். அப்போது அன்னார், 'முஆஸ் பின் ஜபலே! என்று அழைத்தார்கள். அதற்கு நான், அல்லாஹ்வின் தூதரே! நான் இருக்கிறேன்; இது எனக்கு கிடைத்த பாக்கியம் என்று கூறினேன். அல்லாஹ்வின் அடியார்கள் மீது அல்லாஹ்வுக்கு இருக்கும் உரிமை என்னவென்று உனக்குத் தெரியுமா? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு நான், 'அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கு அறிந்தவர்கள் என்று பதிலளித்தேன்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியார்கள் அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும்; அவனுக்கு எதையும் இணையாக்கக் கூடாது என்பதே அவர்கள் மீது அல்லாஹ்வுக்கு இருக்கும் உரிமையாகும்.

சிறிது நேரம் பயணித்த பிறகு மீண்டும் அன்னார், முஆஸ் பின் ஜபலே! என்று அழைத்தார்கள். அல்லாஹ்வின் தூதரே! நான் இருக்கிறேன்; இது எனக்கு கிடைத்த பாக்கியம் என்று கூறினேன். அப்போது அன்னார், 'அடியார்களுக்கு அல்லாஹ்வின் மீது என்ன உரிமை உள்ளது என தெரியுமா? என்று கேட்டார்கள். அல்லாஹ்வும் அவனது தூதருமே நன்கு அறிந்தவர்கள் என்றேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அடியார்களை அவன் தண்டிக்காமல் இருப்பதே ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் புகழ்ந்தவாறு கூறுகிறார்கள்: "திருக்குர்ஆனைப் பரப்புவதற்காக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு நியமிக்கப்பட்டார்களோ, அவ்வாறே சுன்னத்தை நிலைநாட்டவும் நியமிக்கப்பட்டார்கள். குர்ஆன் ஷரீஃப் எவ்வளவு நம்பகமானதோ, அதேபோல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளும் உறுதியானவை ஆகும். இவ்விரண்டு தொண்டுகளையும் ஹஸ்ரத் ரசூல் (ஸல்) அவர்கள் தமது கைகளால் நிறைவேற்றினார்கள். மேலும், அவ்விரண்டையும் தமது கடமையாகக் கருதினார்கள். உதாரணமாக, தொழுகைக்கான கட்டளை வந்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதைத் தமது செயல்கள் மூலம் விளக்கினார்கள். மேலும் செயல் ரீதியாக ஃபஜ்ர் தொழுகைக்கு இத்தனை ரக்அத்கள், மக்ரிப் மற்றும் ஏனைய தொழுகைகளுக்கு இத்தனை ரக்அத்கள் என்பதைச் செய்து காட்டினார்கள். அவ்வாறே ஹஜ்ஜையும் செய்து காட்டினார்கள். பிறகு தமது கரங்களால் ஆயிரக்கணக்கான ஸஹாபிகளை அந்தச் செயல்களைப் பின்பற்றுபவர்களாக ஆக்கி அதனை வலுவாக நிலைநாட்டினார்கள்."

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகை குறித்துக் கூறுகிறார்கள்: "ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நஃபில் தொழுகைகளில் எவ்வளவு கவனம் செலுத்தினார்கள் என்றால் அவை உபரியானவையாக இருந்த போதிலும் ஸஹாபிகளில் யாரெல்லாம் நஃபில் தொழுகிறார்கள்; யாரெல்லாம் தொழுவதில்லை என்பதைக் கண்டறிய இரவில் நகரின் தெருக்களில் வலம் வருவார்கள்."

இன்றைய காலத்தில் யாரிடமாவது, எத்தனை வேளை தொழுகிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் கோபப்படுகிறார்கள்; இது எங்கள் தனிப்பட்ட விஷயம் என்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களோ தஹஜ்ஜுத் தொழுகையைக்கூட கண்காணித்து வந்தார்கள்.

"ஒருமுறை ஒரு சபையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும்போது, அவர் தஹஜ்ஜுத் தொழுதால் அவர் மிகவும் சிறந்த மனிதர் ஆவார் என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இவ்வுலகில் அந்தத் தம்பதியர் மீது கருணை காட்டட்டும்; இரவில் கணவன் விழித்து விட்டால் எழுந்து தஹஜ்ஜுத் தொழுதுவிட்டுத் தன் மனைவியையும், நீயும் எழுந்து தொழு என்று எழுப்பட்டும். அவள் எழாவிட்டால் அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்து எழுப்பட்டும். அதேபோல், மனைவி எழுந்து விட்டால் அவள் தஹஜ்ஜுத் தொழுதுவிட்டு தன் கணவனையும் எழுப்பட்டும். அவன் எழாவிட்டால் அவன் முகத்தில் தண்ணீரைத் தெளிக்கட்டும்."

தொழுகையில் உருக்கம் ஏற்படுவதும் மிகவும் அவசியம் ஆகும். அதற்காகவும் மனிதன் முயற்சி செய்ய வேண்டும். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஒரு வழிமுறையைக் கூறியுள்ளார்கள்: "தொழுகையில் அழுகை வராவிட்டாலும், அழுவது போன்ற ஒரு தோற்றதை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அந்த வெளிப்படையான தோற்றத்தால் உள்ளத்தில் தாக்கம் ஏற்படுகிறது. அதன் பிறகு மனிதனுக்கு அழுகை வரத் தொடங்கும்."

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உறங்கச் செல்லும் போது ஆயத்துல் குர்ஸி மற்றும் திருக்குர்ஆனின் கடைசி மூன்று அத்தியாயங்களான ஸூரா அல் இக்லாஸ், ஸூரா அல்

ஃபலக் மற்றும் ஸூரா அந்நாஸ் ஆகியவற்றை மூன்று முறை ஓதி, தமது கைகளில் ஊதி, பின்னர் உடல் முழுவதும் தடவிக் கொள்வார்கள். தமது தலையிலிருந்து தொடங்கி, உடல் முழுவதும் கைகள் எட்டும் வரை இவ்வாறு தடவிக் கொள்வார்கள்.

சிலர், மிகச்சிறிய துஆக்களை கூறுங்கள்; அதன் மூலமாக எங்களிடம் நன்மைகள் உருவாக வேண்டும், எங்கள் பாவங்கள் அழிய வேண்டும், எங்கள் வேலையும் நடக்க வேண்டும், அல்லாஹ்வின் நெருக்கமும் கிடைக்க வேண்டும். இதற்கு ஏதேனும் திக்ரை கூறுங்கள் என்கிறார்கள். முதல் விஷயம், இறைவணக்கம் ஆகும். அதாவது கடமையான தொழுகைகள். இதற்கு அடுத்தபடியாக இறைவனை நினைவு கூர்வது. திக்ரு ஒரு மனிதனை மேலும் நற்செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. அத்துடன் பிற நற்பண்புகளையும் நற்செயல்களையும் கடைப்பிடிப்பது அவசியம் ஆகும்.

ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காலணிகளுடனும் தொழுதுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது. அதாவது, எங்கு எளிமையை மேற்கொள்ள முடியுமோ அங்கு அன்னார் அவ்வாறு செய்து வந்தார்கள். எனவே, ஒருவருடைய காலணிகள் சுத்தமாக இருக்க வேண்டும். அந்த இடத்தில் அசுத்தம் ஏற்படும் அபாயம் இருக்கும் என்றால், காலணிகளை அணிந்தபடியே தொழுவது அனுமதிக்கப்படுகிறது. அன்னார் இவ்வாறு செய்து, பகட்டிலிருந்தும் பாசாங்குகளில் இருந்தும் இஸ்லாமிய சமுதாயம் தம்மை காத்துக் கொள்ள மிகப்பெரிய உபகாரம் செய்துள்ளார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஜமாஅத்துடன் தொழுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தார்கள். ஒரு முறை கண்பார்வையற்ற ஒருவர் வந்து, “யா ரஸூலல்லாஹ்! எனது வீடு பள்ளிவாயிலிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. எனக்கு பள்ளிக்கு வருவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே தாங்கள் அனுமதி வழங்கினால் நான் மழைக்காலங்களில் வீட்டிலேயே தொழது கொள்வேன்” என்று கேட்டார். முதலில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், சரி! தொழுது கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அவர் அங்கிருந்து சென்ற சற்று நேரத்தில், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களிடம், அவரை மீண்டும் அழைத்து வருமாறு கூறினார்கள். அவர் வந்ததும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், “உமது வீட்டில் பாங்கு சத்தம் கேட்கிறதா?” என்று கேட்டார்கள். அவர் “ஆம்! யா ரசூலல்லாஹ்! பாங்கோசை கேட்கின்றது என்றார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், “பாங்கோசை கேட்கின்றது என்றால் மஸ்ஜிதுக்கு வாருங்கள்” என்று கூறினார்கள்.

அல்லாஹ் தஆலா நமக்கு இறைவணக்கத்தின் உரிமைகளை நிறைவேற்ற நல்வாய்ப்பு வழங்குவானாக. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்ற நமக்கு வாய்ப்பளிப்பானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)